**அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முகாமை உதவியாளர் - தொழிநுட்பம் சாராத தரம் 2 சேவைத் தொகுதியின் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடத்துக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 111ஆம் வகுப்பு**

**அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முகாமை உதவியாளர் - தொழிநுட்பம் சாராத தரம் 2 சேவைத் தொகுதியின் தட்டெழுத்தாளர் பத்து (10) பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

02. ஆட்சேர்த்தல்:

2.1 கல்வித் தகைமைகள்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் விசேட சித்தியுடன் ஒரே முறையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா/தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த.உ/தரப் பரீட்சையில், ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (பொது அறிவுப் பாடம் தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

2.2 தொழில் தகைமை:

தொழிநுட்பக் கல்லூரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய தொழில் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி அதிகார சபை, தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் திறன் விருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட ஏனைய பயிற்சி நிறுவனங்களில் தட்டச்சு பாடநெறி அல்லது செயலாளர் பாடநெறியைப் பயின்று சித்தியடைந்திருத்தல்.

2.3 உடற்றகைமை:

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடற்றகைமைகளையும் மற்றும் உளரீதியான தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

2.4 ஏனைய தகைமைகள்:

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி உயர் நன்னடத்தையைக் கொண்டிருக்க வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தேவையான சகல தகைமைகளையும், 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிக்கு சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

03 வயது:

(i) ஆகக் குறைந்த எல்லை : 18 வருடத்துக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்
(ii) ஆகக் கூடிய எல்லை: 30 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. சம்பள அளவுத்திட்டம்:

(I) சம்பள குறியீட்டு இலக்கம்: MN-1-2016

(II) சம்பள அளவுத்திட்டம்: ரூ.27,140-10x300-11x350-10x495-10x660-45,540/-
(இந்த சம்பள அளவுத்திட்டத்தில் அடிப்படைச் சம்பளம் 27,140/- உரித்தாகுவது அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் இரண்டாம் அட்டவணைக்கு ஏற்ப 2020ஆம் ஆண்டிலிருந்தாகும், 2019ஆம் வருடத்துக்கு உரிய அடிப்படைச் சம்பளம் ரூ. 24,336/- தொகையாகும்)

05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

(I) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். (ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானத்துக்கு நீங்கள் உடன்பட வேண்டும்)

(II) அனாதைகள் மற்றும் விதவைகள் நிதியத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(III) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மூன்று வருட தகுதிகாண் காலத்துக்கு உட்படுதல் வேண்டும்.

06. ஆட்சேப்பு முறை:

தொழில் தகைமையைப் பரீட்சித்தல் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்தல் நேர்முகப் பரீட்சையொன்றை நடாத்துதல் என்பவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

06.1 தொழில் தகைமையை சோதித்தல்

| பாடங்கள் | ஆகக் கூடுதலான புள்ளிகள் | சித்தயடைதல் புள்ளிகள் |
|---|---|---|
| சிங்களம்/ஆங்கிலம் தட்டச்சு செய்தல் (ஆகக் குறைந்த வேகம் நிமிடத்துக்கு 20 சொற்கள் படி 20 நிமிடங்களுக்குள் தட்டச்சு செய்தல்) | 100 | 40 |

06.2 திறமையை மதிப்பிடுகின்ற நேர்முகப் பரீட்சை

புள்ளிகள் வழங்குகின்ற முறை:

| புள்ளிகள் வழங்குகின்ற பிரதான தலைப்புக்கள் | ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| க.பொ.த.(சா/த) பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளைக் கருத்தில் கொள்கின்ற பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்காக<br>• A சித்தி – 05 புள்ளிகள்<br>• B சித்தி – 03 புள்ளிகள்<br>• C சித்தி – 02 புள்ளிகள்<br>க.பொ.த.(உ/த) பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளை கருத்தில் கொள்கின்ற பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்காக<br>• A சித்தி – 05 புள்ளிகள்<br>• B சித்தி – 04 புள்ளிகள்<br>• C சித்தி – 03 புள்ளிகள்<br>• S சித்தி – 02 புள்ளிகள் | 20 |

| | |
|---|---|
| 2. துறைசார் மேலதிக தொழிற்றகைமை<br><br>தனியார்/ அரச நிறுவனங்களில் 06 மாதங்கள் தட்டச்சாளராக அல்லது கணனிப் பயிற்சி பெற்றிருத்தல்<br>• 06 மாதங்களுக்காக – 10 புள்ளிகள்<br>• 01 வருடத்துக்காக – 20 புள்ளிகள் | 20 |
| 3. அனுபவம்<br>அரச அல்லது அரசு சார்பான அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தட்டச்சாளர் பதவியில்/ தனிப்பட்ட உதவியாளர் பதவியில் சேவை செய்திருத்தல்<br>• 01 வருடத்துக்காக – 05 புள்ளிகள்<br>• 02 வருடங்களுக்காக 10 புள்ளிகள்<br>• 03 வருடங்களுக்காக 15 புள்ளிகள்<br>வருடத்துக்கு 05 புள்ளிகள் வீதம் கூடிய புள்ளிகள் - 15 | 15 |
| 4. ஆங்கில மொழி அறிவு<br>• 03 மாத கால சான்றிதழுக்காக – 05 புள்ளிகள்<br>• 06 மாத கால சான்றிதழுக்காக – 10 புள்ளிகள்<br>• 01 வருட கால சான்றிதழுக்காக – 20 புள்ளிகள் | 20 |
| 5. கணனி அறிவு<br>• 03 மாத காலம் அல்லது அதனைவிட குறைந்த காலத்துக்காக – 05 புள்ளிகள்<br>• 06 மாத கால சான்றிதழுக்காக – 10 புள்ளிகள்<br>• 01 வருட கால சான்றிதழுக்காக – 20 புள்ளிகள் | 20 |
| 6. நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கின்ற தொடர்பாடல் திறனுக்காக | 05 |

07. தகைமை மதிப்பிடல் நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

08. தகைமையைப் பரீட்சித்தல் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற புள்ளிகளின் திறன் அடிப்படையில் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப நியமன அதிகாரியால் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

09. இதில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர், இல.31, இசுரு மாவத, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**தட்டச்சாளர் பதவிக்கான விண்ணப்பம்**" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

திகதி:…………… ஏ.வெலிஅங்க

அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்

**அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முகாமை உதவியாளர் - தொழிநுட்பம் சாராத தரம் 2 சேவைத் தொகுதியின் தட்டெழுத்தாளர் வகுப்பு - 111ஆம் பதவி வெற்றிடத்துக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான மாதிரி விண்ணப்பபடிவம்**

01. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில்) :……………………………………

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில்):- ……………..

03. பிறந்த திகதி:- வருடம்……மாதம்………திகதி:…….

வயது(2019.08.23ஆம் திகதிக்கு)- …………..

04. பால்: ………………..

05. திருமண அந்தஸ்து: …………………

06. தொலைபேசி இலக்கம்: ………………

07. மின்னஞ்சல் முகவரி: …………………

08. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ………………..

09. நிரந்தர முகவரி: ……………………………………

10. கல்வித் தகைமை: ………………………………..

11. தொழிற்றகைமை: …………………………………

12. ஏனைய தகைமைகள்: ……………………………

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:…………… விண்ணப்பதாரியின் கையொப்பம்:………………..